# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய அரசியலமைப்பு**

**பகுதி : பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சட்டங்கள் மற்றும் நலதிட்டங்கள்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

**பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சட்டங்கள் மற்றும் நலதிட்டங்கள்:**

- குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பாணைக் குழு சட்டம் 2005.
- குழந்தைகள் மு ன்னேற்றம் மற்றும் நல னுக்காக தகுதியான நலத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

  1. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் (ICDS) - 1975 : நோக்கங்கள் :

     அ) ஆறு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் , கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய் மார்கள் ஆகியோர்களின் உடல் நலத்தைப் பாதுகாத்தல்.

     ஆ) குழந்தை இறப்பு விகிதம் , சத்துணவு குறைவு , பள்ளி இடை நிற்றல் போன்றவற்றின் விழுக்காடுகளைக் குறைத்தல்

  2. பணிக்குச் செல்லும் தாய்மார்களி ன் குழந்தைகளுக்காகக் குழந்தைகள் பேணி வளர்க்கும் ராஜீவ் காந்தி குழந்தைக் காப்பகத் திட்டம் 2006 இல் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் , 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்காகக் குழந்தைகள் காப்பகத்தை ஏற்படுத்தி நடத்தி வருகின்றது.

- ஒவ்வோரு ஆண்டும் நவம் பர் 14 ஆம் நாள் குழந்தைகள் தின மாகக் கொண்டாடப்படுகிறது.
- இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 23, பெண்களின் விடுதலை பற்றிக் கூறுகிறது.
- பிரிவு 23, பெண்களை வியாபாரப் பொருளாக பயன்படுத்துவதை தடைசெய்கிறது.
- பெண்களை அடிமையாக விற்பது சட்டவிரோதமாகும்.
- 1978 இல் உருவாக்கப் பட்ட குழந்தைத் திருமணத் தடைச் சட்ட திருத்தம் பெண்களின் குழந்தைகளுக்கு நடைபெறுகின்ற திருமண வயது 15 லிருந்து 18 ஆகவும், ஆணின் திருமண வயது 18 லிருந்து 21 ஆகவும் உயர்த்தியுள்ளது.
- 1961இல் நடைமுறைக்கு வந்த வரதட்சணைத் தடைச் சட்டம் , வரதட்சணைக் கொடுப்பதையும், பழங்காலத்திலிருந்தே வாங்குவதையும் தடை செய்துள்ளது . 1986 இல் கொண்டு வரப்பட்ட வரதட்சணைத் தடைச்சட்டத்திருத்தம் , வரதட்சணை வாங்குபவர், வரதட்சணை தொடர்பாகப் பெண்களைக் கொடுமைப்படுத்துபவர் மீது கடுமையான தண்டனை கொடுக்க வழி வகுத்துள்ளது.
- இந்திய அரசியல் அமைப்பின் சரத்து எண். 39(1) மற்றும் 45 ஆகியன

  குழந்தைகள் பாதுகாப்பையும், வளர்ச்சியையும் பற்றிக் கூறுகிறது.
- சரத்து 24, குழந்தைகளின் அடிப்படை உரிமைகளைப்பற்றியது . இது 14வயது முடிய உள்ள குழந்தைகளுக்கு எந்தக் குழந்தையும் ஆலைகளில் , அபாயகரமான தொழில்களில் இந்திய அரசு இளைய சமுதாயத்தை ஈடுபடுவதையும் தடை செய்கிறது.
- சரத்து 39 (1), குழந்தைகளின் ஆரோக்கிய மான வளர்ச்சி , குழந்தைகள் மற்றும் இளையோர்மீது போதிய கவனத்துடன் செயல்படுதல் , குழந்தைகள் நலனுக்காகப் சுரண்டல் இருந்து பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது.

- தாய்ப்பாலுக்கு மாற்றாக, உணவுப்புட்டிகள் மற்றும் குழந்தை உணவு திட்டம் - 1992.
- தமிழ்நாடு அரசு 1997இல் (ஈவ்டிசிங்) பெண்களை இகழ்தல் தடைச் சட்டம் இயற்றியுள்ளது. 2002 இல் உருவாக்கப்பட்ட இதன் திருத்தம் பெண்களுக்குத் தொல்லை கொடுப்பதைத் தடை செய்துள்ளது.
- 73 ஆவது, 74 ஆவது அரசியல் சட்டத்திருத்தம் ஊராட்சி அமைப்புகளிலும் , உள்ளூர் அமைப்புகளிலும், பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டைக் கொடுத்துள்ளது.
- வேலைக்கான பயிற்சித் திட்டம் (1996): கைவேலைப்பாடுகள், கைத்தறிகள் காதி போன்ற கிராமத் தொழிற்சாலைகளில் வேலை வழங்க பெண்களுக்குப் பயிற்சி அளிக்கிறது.
- 1996 இல் சாதனைக் குழந்தைகளுக்கான தேசிய விருது ஏற்படுத்தப்பட்டது . ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தினத்தன்று 4 முதல் 15 வயதிற்குட்பட்ட, பாராட்டுக்குரிய குழந்தைகள், சிறப்பு விருதுகளினால் கௌரவிக்கப்படுகிறார்கள்.
- நூறு ஆண்டுகளுக்கு முன்னரே , சுதந்தரப் போராட்ட தலைவர் கோபால கிருஷ்ண கோகலே, குழந்தைகளின் கல்வி உரிமையின் முக்கியத்துவத்தை ஆங்கிலேயர் காலத்திலேயே, சட்ட சபையில் எடுத்துரைத்து , அதனை பெறுவதற்காக அரும்பாடுபட்டார். அவரின் கனவு 2010, ஏப்ரல் 1ஆம் நாள் கொண்டுவரப்பட்ட கல்வி உரிமைச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 6 முதல் 14வயது முடிய உள்ள குழந்தைகளுக்குக் கல்வி ஓர் அடிப்படை உரிமையாக ஆக்கப்பட்டுள்ளது . இதன் மூலமாக இந்திய அரசு இளைய சமுதாயத்தை நிறைவான கல்வி அறிவு படைத்தோர் சமுதாயமாக மாற்ற வழிவகுத்துள்ளது.
- சரத்து 45, பதினான்கு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்க வழிவகுக்கிறது.
- சதி ஒழிப்பு சட்டம்- 1829
- இந்திய அரசியலமைப்புச் சட்டம் 24 வது பிரிவின்படி , பதினான்கு வயதிற்குக் கீழ் உள்ள எந்த குழந்தையும் தொழிற்சாலை / மற்றும் சுரங்கம் அல்லது பிற ஆபத்தான வேலைகளில் அமர்த்தக் கூடாது என்பதை தெளிவாகக்கூறுகிறது . இந்த அரசியலமைப்புச் சட்டம் தவிர்த்து , குறைந்தது 13 முக்கியச் சட்டங்கள் குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 1938 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் சட்டம் , 1948 ஆம் ஆண்டு தொழிற் சாலை சட்டம்
- 1950 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் சட்டம்,
- 1951 ஆம் ஆண்டு தோட்டத்தொழிலாளர் சட்டம்,
- 1952 ஆம் ஆண்டு சுரங்கச் சட்டம் , 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் போன்றவை பல மாநிலங்களில் கொண்டு வரப்பட்டன.